**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06022021-4417

Volume: 6

Issue: 2

Month: October

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 23.07.2021

Accepted: 14.08.2021

Published: 01.10.2021

Citation:
Vyasan, A. "A Study of the Role of Sivathamil Selvi Thangamma Appakutty in the Development of Hinduism in Sri Lanka." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 2, 2021, pp. 120–25.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i2.4417

*Corresponding Author:
viyasan95@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# A Study of the Role of Sivathamil Selvi Thangamma Appakutty in the Development of Hinduism in Sri Lanka

**A. Vyasan**

*Final Year Student, Department of Hindu Civilization*

*Faculty of Hindu Studies, University of Jaffna, Sri Lanka*

**Abstract** - The vegan culture of Sri Lanka is ancient and unique. Many have contributed to the development of this culture. The twentieth century opened new chapters in educational development, social change and change of thinking as a result of English rule. Such changes began to have a massive impact on the perception of women. New chapters were opened. Such changes began to have a massive impact on the perception of women. Women's education, women's going to work, etc. were made possible. Born and educated at this time, Deivath Thirumakal - Dr. Sivathamilch Selvi Thangamma Appakutty was a teacher. The study, entitled A Role of Sivathamil Selvi Thangamma Appakutty in the Development of Hinduism in Sri Lanka, entitled How Her Contribution to the Educational Development of Sri Lanka Women and Overcoming the Challenges Facing Women. This study is carried out with the aim of the study. This study forms a descriptive study. Performed with analysis, comparison and historical analysis when appropriate. The mothers were eloquent, well-managed, artistic and literary, and had a fearless and dedicated service mindset. Traditional studies on women should be carried out in the field of education and social service, and studies on women should be conducted from different angles through various fields. Such research and their findings may help to show our present and future generations that ancient women lived and excelled in the Hindu society subject to various restrictions.

**Keywords:** Women's Education, Thangamma Appakutty, Hindu Community, Works.

## References

1. Shanmugasundaram, T. (1985). *Sivathamilzh Selvam Thangamma Appakuttyin Vazhkai Vazham*, Sivathamilzh Selvi Thangamma Appakutty Manichasabai Veliyidu, Tellippalai.
2. Thirumurugan, Aru. (2011). *Saiva Samayathin Valarsiyil Mangayarin Pangalippu*, Senchor Selvam, Ponvizha Sirappumalar, All Ceylon Hindu Council.
3. Vigneswari, P. (2010). Elangaiyin Samaya Samooga Valarchiyil Munoodigalana Sila Pengal, Selvi Vasakam, Sri Durga Devi Devasthanam, Tellippalai.
4. Selvamanokaran, T. (2015). *Elangaiyin Saivatamil Panpattu Valarchiyil Theivathirumagal Kalanithi Sivatamil Selvi Appakutiyin Vagipagam Oor Ayivu*. Publication of the All Ceylon Hindu Council Diamond Jubilee.
5. Sampanthan, J.T. (2011). *Sivathamil Selvi Thangamma Appakutty Vazhviyarpanigal*. London, Saiva Munetra Sangam.
6. Sivathamil Aaraichi Katturaigal. (1985). Tellippalai, Manivilasabai Veliyeedu.

# ஈழத்து இந்து சமய வளர்ச்சியில் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபங்கு ஓர் ஆய்வு

***அ.வியாசன்***
விடுகை வருட மாணவர், இந்து நாகரிகத்துறை
இந்துக்கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***

*ஈழத்து சைவத்தமிழ்ப் பண்பாடு தொன்மையானது தனித்துவமானது. ஆங்கிலேய ஆட்சியின் விளைவாக ஏற்பட்ட கல்வி வளர்ச்சி, சமூக மாற்றம், சிந்தனை மாற்றம் இருபதாம் நூற்றாண்டில் புதிய அத்தியாயங்களை திறந்து வைத்தது. இவ்வாறான மாற்றங்கள், பெண்கள் பற்றி இருந்த கருத்தியலில் பாரிய செல்வாக்கு செலுத்தத் தொடங்கின. பெண்கல்வி, பெண் வேலைக்கு செல்லுதல் போன்றவற்றைச் சாத்தியமாக்கின. இக்காலகட்டத்தில் பிறந்து கல்வி கற்று ஆசிரியராகிப் பல பணிகள் புரிந்தவரே சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆவார். ஈழத்து இந்து சமய வளர்ச்சியில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபங்கு ஓர் ஆய்வு என்ற தலைப்பில் அமைந்துள்ள இவ்வாய்வானது, ஈழத்து பெண்களின் கல்வி வளர்ச்சி மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றி கொள்ளுவதற்கு இவருடைய பங்களிப்பு எவ்வாறு இருந்தது என்பதை ஆய்வின் நோக்காகக் கொண்டுள்ளது. பண்டைய பெண்கள் இந்து சமுதாயத்தில் விதிக்கப்பட்ட கட்டுக்கோப்புகளுக்கு உட்பட்ட வகையில் வாழ்ந்து சிறப்பித்தனர் என்பதை ஆய்வுத்தேடல்களும் அவற்றின் வெளிப்பாடுகளும் உதவியவாக இவ்வாய்வு அமையும்.*

***திறவுச்சொற்கள்:*** *பெண்கல்வி, தங்கம்மா அப்பாக்குட்டி, இந்து சமயம், பணிகள், சமயம்*

## அறிமுகம்

இந்துப் பெண்கள் பற்றிய விழிப்புணர்வுகள் இருபதாம் நூற்றாண்டில் ஏற்படுவதற்கும் சமூக நிலையில் மேம்பாடு அடைவதற்கும் வாய்ப்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டு நவீன சீர்திருத்தங்களது செயற்பாடுகளே அடித்தளம் இட்டன. இருபதாம் நூற்றாண்டுக் காலத்து வளர்ச்சி நிலைகளை பார்க்கின்ற போது நவீன சீர்திருத்தங்களது செயற்பாடுகளை திடமாக மதிப்பீடு செய்து கொள்ளமுடியும். பெண்ணியம் என்ற உலகளாவிய நிலை சார்ந்த ஒரு கண்ணோட்டமும் பெண்களுடைய நலனுக்காக சமூக நிறுவனங்கள் எழுச்சி பெறுவதற்கும் இதன் வழி வாய்ப்பு ஏற்பட்டமைக்கும் பெண்கள் மீது அக்கறை கொண்ட படித்த வர்த்தகத்தவர்களது செயற்பாடுகளே காரணமாக அமைந்தன. இத்தகைய பிண்ணியில் தான் யாழ்ப்பாணத்து இந்துப் பெண்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெண்கள் பலர் முன்னின்று உழைத்தனர். இந்த வரிசையிலே கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தை மையப் புள்ளியாகத் தகவமைத்துக்கொண்டு, பல்வேறுபட்ட பணிகளைப் புரிந்தார், இலங்கையின் முக்கியத்துவம் வாய்ந்த, சைவத்தமிழ்ப் பெண்மணியாகத் திகழ்கின்றார்.[1] அம்மையார் பேச்சாற்றல், சிறந்த முகாமைத்துவத்திறன், கலை இலக்கிய ஆளுமை, அஞ்சாமையும் அர்ப்பணிப்பும் நிறைந்த சேவை மனபாங்கு என்பவற்றை கொண்டவராவார்.

**கல்வியும் கற்பித்தலும்**

இவர் யாழ்பாணத்தில் தெல்லிப்பளையில் 1925 ஆம் ஆண்டு தை மாதம் ஏழாம் நாள் பிறந்தார். இவர் மல்லாகத்தில் அமெரிக்கன் மிசன் பாடசாலை, விசாலாட்சி வித்தியாசாலை, அளவெட்டி சதானந்த வித்தியாசாலை என்பவற்றில் தொடக்கக் கல்வியைக் கற்றார். பின்னர் சுன்னாகம் இராமநாதன் கல்லூரிலே இடைநிலைக் கல்வியைப் பயின்று 1941 முதல் 1944 வரை இராமநாதன் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றார். ஆரிய திராவிட பாசாபிவிருத்திச் சங்கம் நடத்திய “பண்டிதர்” தேர்விலும் சைவ சித்தாந்த சமாஜம் நடத்திய “சை வப்புலவர்” தேர்விலும் வெற்றி பெற்றார்.[2] பண்டிதையாகவும் சைவப்புலவராகவும் விளங்கிய சிவத்தமிழ்ச் செல்வி 1946 முதல் மட்டக்களப்பு சென்று சிசிலியா ஆங்கிலப் பாடசாலையிலும் 1949 முதல் கொழும்பு பாத்திமா பெண்கள் பாடசாலையிலும் பின்பு அளவெட்டி சதானந்த வித் தியாலயத்திலும் 1964 முதல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் ஆசிரியப் பணி செய்துள்ளார். சாதி மத பேதமின்றி சேவை மனப்பான்மையுடனும் கடமையுணர்வுடனும் கற்பிக்கும் கல்வி என்றும் பலன் தரக்கூடியது என்பதனை ஆதாரப்படுத்தி வாழ்ந்தவர் அம்மையார்[3] இக்காலகட்டங்களில் ஏற்பட்ட அனுபவம் தான் அம்மையாரைப் பொது வாழ்விற்கு உந்தித்தள்ளிற்று. கிறிஸ்தவ அருட்சகோதரிகளின் தியாகம், நேரம் தவறா இயல்பு, அருட்பணி என்பனவும் இஸ்ஸாமியப் பெண்களின் கலாசார உணர்வு என்பன அம்மையாரைக் கவர்ந்தன. அதேவேளை சமூகத்தின் பெண்களின் நிலை பற்றிய தெளிவும் ஏற்பட்டது. இனம், மொழி, சமயம், ஜாதி என்பவற்றிக்கு அப்பால் பெண்கள் கல்வி, அரசியல், பொருளாதாரம், கலை என யாவற்றிலும் வரவேண்டும். அதேவேளை தத்தம் இனம், மொழி, சமயப் பாரம்பாரியங்களை, பண்பாடுகளைப் பேண வேண்டும் என்றுங் கருதினார்.

**சொற்பொழிவுப் பணிகள்**

இலங்கையில் சைவத்தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் சைவப் பெண்கள் பலரும் ஈடுபாடு காட்டி வந்துள்ள போதும், சைவசமய சமூகப் பணிகளால் சைவப் பண்பாட்டை யாழ்ப்பாண்த்தில் நிலை நிறுத்த அரும்பாடுபட்ட முதன்மையான கணிப்பினைப் பெறும் சைவத்தமிழ்ப் பெண்ணாக, தங்கம்மா அப்பாக்குட்டி தன்னை அடையாளப்படுத்தினார்.

தமிழ்நாட்டுச் சொற்பொழிவுக்கு அழைக்கப்பட்டிருந்த சிவத்தமிழ்ச்செல்வி ஈழத்தவர்கள் பெருமை பெறக்கூடியவகையில் அங்கே தமது ஞானத்திறனை வெளிப்படுத்தினார். 1965ல் சிதம்பரத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த சமாஜ வைரவிழாவில் மாணிக்கவாசகரின் ஞானஉள்ளம் பற்றி ஆற்றிய உரை எல்லோரையும் கவர்ந்தது. 1966 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் “இளங்கோ போற்றிய பெருமை” பற்றிய இலக்கிய சொற்பொழிவைக் கேட்டின்புற்றவர்கள் பெரிதும் பாராட்டினார். 1973இல் திருவிடை மருதூரில் நடந்த திருமுறைக் கருத்தரங்கில், திருவாடுதுறை ஆதீனத்தின் அழைப்பின் பேரில் சென்ற இவர், மகளிர் மாநாட்டிற்குத் தலைமையேற்று நடத்தினார். இவ்வாறன மாநாடு ஒன்றில் தலைமை ஏற்ற முதலாவது ஈழத்துத் தமிழ்ப்பெண் என்ற பெருமையை ஈட்டித்தந்தார். திருச்சி சாரதா மகளிர் மன்றத்திலும் இவரின் உரை இடம் பெற்றது. 1976இல், கும்பகோணம் குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம் ஏற்பாடு செய்திருந்த திருமுறை விழாவின் இரண்டாம் நாள் விழாவுக்குத் தலைமை ஏற்று நடத்தினார். 1977இல், திருவிடைமருதூரில் நடைபெற்ற திருவாசக விழாவின் இவர் ஆற்றிய உரை பலரின் நெஞ்சை உருக்கியது.

இவ்விழாவில் கலந்து கொண்ட எம்.ஜி.ஆர் இவரின் உரைகேட்டு மகிழ்ந்தார். திருக்கோவிலூர் ஞானானந்தசுவாமிகள் ஜெயந்திப் பெருவிழாவிலும் சொற் பொழிவாற்றினார்., 1978இல் சிவகங்கையில் நடைபெற்ற சைவசித்தாந்த மகாநாட்டின் மாதர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கியுரை நிகழ்த்தினார். 1979இல், புதுக்கோட்டை அரசின் ஆதரவில், சாயி மாதா சிவபிருந்தாதேவி ஏற்பாடு செய்திருந்த உலகளாவிய இந்து மாநாட்டில் இவர் ஆற்றிய உரை இவரின் புகழை மேலும் உயர்த்தியது. 1980இல், வட ஆற்காடு ஆரணியில் நடைபெற்ற சைவ சித்தாந்த சமாஜத்தின் மங்கையர் மாநாட்டில் தலைமையேற்று உரை நிகழ்த்த இவரையே அழைத்தனர். இவைதவிர, தமிழ் நாட்டில் சேலம், கோயம்புத்தூர், பொள்ளாச்சி, திருச்சி முதலிய இடங்களில் ஆற்றிய உரைகள் கல்விமான்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றன. தமிழ்நாடு மட்டுமின்றி தென்கிழக்காசிய நாடுகள், புலம்பெயர் மக்கள் வாழுகின்ற நாடுகளில் அம்மையார் சென்று சொற்பொழிவை நிகழ்த்திப் பாரட்டுப் பெற்றார்.

நாவலர் பெருமானுக்குப் பின் உயிர்த் துடிப்புள்ள சகாப்தத்தை உருவாக்கியவர் சிவத்தமிழ்ச் செல்வி. அவரது சொற்பொழிவுப் பணி அறிவுத்திறனையும் புலமையினையும் வெளிப்படுத்தியது. சைவ இலக்கியம், சைவ சித்தாந்தம்.

## பட்டங்களும் விருதுகளும்

| பட்டம் வழங்கிய நிறுவனங்கள் | ஆண்டு | பெற்ற பட்டம் |
|---|---|---|
| மதுரை ஆதினம் | 1966 | செஞ்சொற் செம்மணி |
| காரைநகர் மணிவாசகர் சபை | 1970 | சிவத்தமிழ்ச் செல்வி |
| காஞ்சி மெய்கண்டார் ஆதீனம் | 1971 | சித்தாந்த ஞானகரம் |
| தமிழ் நாடு இரோஜஸ்வரி பீடாதிபதி | 1972 | சைவதரிசனி |
| சிலாங்கூர் இலங்கைச் சைவ சங்கம் | 1972 | திருவாசகக் கொண்டல் |
| வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம் | 1973 | திருமறைச் செல்வி |
| ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் | 1974 | சிவமயச் செல்வி |
| அகில இலங்கை இந்துமாமன்றம் | 1974 | சிவஞான வித்தகர் |
| தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம் | 1974 | துர்க்காதுரந்தரி |
| மாதகல் நுணசை முருக மூர்த்தி தேவஸ்தானம் | 1978 | செஞ்சொற் கொண்டல் |
| இணுவில் பாராஜசேகரப் பிள்ளையார் தேவஸ்தானம். | 1983 | திருமொழி அரசி |
| இலங்கை அரசு | 1991 | கலாசூரி |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 1998 | கலாநிதி |
| அகில இலங்கை இந்துமாமன்றம் | 2005 | தெய்வத்திருமகள் |
| ஹவாய் சைவ ஆதீனம் | 2007 | உலக ஆன்மீக மறு மலர்ச்சியாளர் |

எனும் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அவர் பெற்றுக்கொண்ட கௌரவப்பட்டங்கள் இவரது அறிவுப் புலமையையும் இணையில்லாச் செயலாற்றலின் சிறப்பையும் அறிந்துகொள்ள உதவும்.

### கோயிற்பணிகள்

1962 ஆம் ஆண்டு தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத் திருப்பணிச் சபையில் பொருளாளராக இருந்து புதிய கட்டிடம், உள்வீதி என்பன உருவாக்கப்பட்டு 1965 இல் கும்பாபிசேகம் செய்யப்பட்டது. அங்கு திருமுறைமடம், பிரகாரக் கோயில்கள், கொடிமரம், சித்திரத்தேர், இராஜகோபுரம், திருக்குளம், கலியாண மண்டபம், அடியார்கள் விடுதி, அன்னதான மடம், அலுவலகம், அர்ச்சகர் இல்லம், கோசாலை, நந்தவனம், குருகுலம், தவில் நாதஸ்வர வகுப்பு, நூலகம், நடன வகுப்பு, வாலிபர் மன்றம், மகளிர் தொண்டர்சபை முதலியவை அமைக்கப்பெற்று துர்க்காபுரமாயிற்று.[4] இவ்வகையிலே ஆலயங்கள் சமுதாய மையம் என்பதை நடைமுறையில் காட்டியவர் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் திக்கற்ற பெண்களுக்கு மகளிர் துர்க்காபுரம் இல்லம், கதியற்ற சிறுமிகளுக்கு இலவச உணவு, உடை, கல்வி வசதிகளுடன் அமைந்த சிறுமிகள் பராமரிப்பு இல்லம், முதிய மகளிர் பாரமரிப்பு இல்லம், அகதிகள் பாரமரிப்பு நிலையங்களுக்கு நிதி உதவி, சுனாமி அனர்த்த நிதி உதவி, நல்லை ஆதீனம், இளங்கலைஞர் மன்றம் முதலிய அமைப்புக்களின் வளர்ச்சிக்கு நிதி உதவி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் சமயக் கல்வித் துறைக்கு புலமைப்பரிசல் திட்டம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் புலமைப்பரிசில் நிதி போன்ற பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சைவ சித்தாந்தத் தத்துவப் பணி

தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் தத்துவப்பணியாகிய சைவ சித்தாந்தத் தத்துவப் பணியினை இரண்டு தளங்களில் பகுத்து நோக்கலாம். "நடைமுறை வாழ்வியல் சார்ந்ததாய் சைவ சித்தாந்தத்தை வாழ்ந்து காட்டலும் வழிகாட்டலும், கோட்பாட்டியல் ரீதியான சைவ சித்தாந்த பரம்பலுக்கு உதவினார்."[5] அம்மையாரின் சிறப்பு என்பதே "சமூகத்தோடு ஒட்ட ஒழுகல்" என்பதுதான். சமயம், தத்துவம் எதுவாயினும் கற்றவரும் மற்றவரும் விளங்க செவ்விய மொழியில் எடுத்துரைப்பதும் வாழ்ந்து காட்டுதலுமே அவரது தனித்துவமான பண்பாகும். அவர் வாழ்வியல் தத்துவமான சைவசித்தாந்தத்தைத் தன் வாழ்வியலாக்கி அதன் பரவலாக்கத்திற்கும், புதிய பாய்ச்சலுக்கும் காரணமாகத் திகழ்ந்தார். நாவலர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடரும் பெண்மணியாக இவரை ஈழத்து சைவத் தமிழர்கள் போற்றினர். இதனை, "சைவத்தாந்தத்தை மெய்யியலாய் பார்க்கும் பார்வையே இருந்து வருகிறது. ஆனால் அதனை வாழ்வியலாக வாழ்ந்து காட்டிய சைவப் பெண்மணியாகவும் சைவசித்தாந்தத்திற்கு பங்களிப்பு செய்த பெண் கல்வியாளராகவும் யாழ்ப்பாணப் பல்ககலைக்கழகத்தில் சைவசித்தாந்தம் என்ற தனித்துறை புதிதாக உருவாக வேண்டுமென்று வற்புறுத்தியதோடு இதற்கு நிதியுதவியும் வழங்கி ஊக்குவித்தார். அத்துடன் ஆறுமுகநாவலரின் வழித்தடத்தில் சைவ சித்தாந்தத்தை வளர்க்கவேண்டும் என்ற சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்த முக்கியமானவர்களுள் இவரும் ஒருவர்."[6] எனும் வேதநாதன் கூற்று அம்மையாரின் சிறப்புக்களையும் மேன்மைகளையும் தெளிவுபடுத்துகின்றது.

### சமூகப் பணிகள்

தங்கம்மா அப்பாக்குட்டி சாதித்த புரட்சியின் முக்கியத்துவம் பற்றி கா. சிவத்தம்பி அவர்கள் கூறிய கருத்து இங்கு மனங்கொள்ளத்தக்கது. "யாழ்ப் பாணத்தின் இந்துமதப் பண்பாட்டின் அண்மைக் காலத்தில் இரு முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒன்று இந்துக்களால் வழிபடப்பெறும் ஒரு பெண் தெய்வத்தின் வழிபாடு பற்றியது. மற்றையது யாழ்ப்பாணப் பிரதேசத்தின்

கோயில் முகாமை பற்றியது. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி என்ற ஒரு தமிழாசிரியையின் ஆன்ம யாத்திரையினூடாக அவரது புலமை முதிச்சியின் வழியாக அவரை வழி நடத்தும் சமூக மத தரிசனத்தினூடாக இந்த இரு மாற்றங்களும் நிறைவேறியுள்ளன."[7] அறிவும் ஆற்றலும் உழைப்பும் உயர்ந்த சிந்தனைகளும் இருந்தால் பெண்ணினத்தாலும் பெருஞ்சாதனைகளைச் சாதிக்க முடியும். அவர் 15 - 06 - 2008 ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வின்றும் விண்ணுலகு மேவினார்.

## முடிவுரை

அம்மையார் தன் ஆளுமையாலும் பணிகளாலும் சைவத் தமிழ்ச் சமூகம் மேன்மையுற தன்னை அர்ப்பணித்தவர். உண்மை, நேர்மை, சத்தியம், கற்பு, ஒழுக்கம் எனும் பாரம்பரிய உணர்வுகளால் கட்டுண்ட சமூகத்திற்கு அதனை நவீன மயப்படுத்திப் போதிக்கின்ற அதேவேளை அம்மையார், பெண்கள் தன்னம்பிக்கை, சுயமுனைப்பு, கல்வியறிவு, சுயதொழில் என்பவற்றையும் பெற்றிருக்க வேண்டும் என்கிறார். நிர்வாகத் திறன், அர்ப்பணிப்பு மிகுந்த உழைப்பு அவற்றுக்குத் கிடைத்த அங்கீகாரம் என்பன இருப்பினும் பெண் என்ற வகையில் அவர் சமூகத்தில் பல்வேறு எதிர்ப்புக்களையும் சந்தித்துள்ளார். அர்ப்பணிப்பு மிகுந்த சேவை அவரை விமர்சனத்திற்கு அப்பாலான பெண்மணியாகவும் தலைவியாகவும் ஆக்கியது.

## அடிக்குறிப்பு

1. செல்வமனோகரன், தி. (2015). இலங்கையின் சைவத்தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் தெய்வத்திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் ஓர் +ஆய்வு, ப - (முன்னுரை).ச
2. விக்னேஸ்வரி, ப. (2010). *இலங்கையின் சமய சமூக வளர்ச்சியில் முன்னோடிகளான சில இந்துப்பெண்கள்.* (மு.கு.நூ), ப - 235.
3. செல்வமனோகரன், தி, (2015), (மு.கு.நூ) ப - 09.
4. பத்மா, சோ., (2003), ஈழத்து மாண்புறு மகளிர், ப - 08.
5. செல்வமனோகரன், தி. (2015). (மு.கு.நூ), - 68.
6. வேதநாதன், மா., (1993), சைவசித்தாந்த விருத்திக்கு ஈழத்தவரின் பங்களிப்பு, ப - 04
7. செல்வமனோகரன், தி, (2015), (மு.கு.நூ), ப - 125.

## உசாத்துணை நூல்கள்


1. சண்முகசுந்தரம், த. (1985). *சிவத்தமிழ்ச் செல்வம் தங்கம்மா அப்பாக்குட்டியின் வாழ்க்கை வளம்.* சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மணிவிழாச்சபை வெளியீடு, தெல்லிப்பளை.
2. திருமுருகன், ஆறு. (2011). *சைவ சமயத்தின் வளர்ச்சியில் மங்கையரின் பங்களிப்பு,* செஞ்சொற் செல்வம், பொன்விழா சிறப்புமலர், அகில இலங்கை இந்துமாமன்றம்.
3. விக்னேஸ்வரி, ப. (2010). இலங்கையின் சமய சமூக வளர்ச்சியில் முன்னோடிகளான சில பெண்கள், சிவத்தமிழ் செல்வி வாசகம், ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை.
4. செல்வமனோகரன், தி. (2015). *இலங்கையின் சைவத்தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் தெய்வத்திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் ஓர் ஆய்வு.* அகில இலங்கை இந்து மாமன்ற வைரவிழா வெளியீடு.
5. சம்பந்தன், ஐ, தி. (2011). சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்வியற் பணிகள், லண்டன், சைவ முன்னேற்ற சங்கம்.
6. சிவத்தமிழ் ஆராய்ச்சிக்கட்டுரைகள், (1985), மணிவிழாச்சபை வெளியீடு, தெல்லிப்பளை.